# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள www.supeedsam.com

வியாழக்கிழமை 07.11.2024 supeedsam.com supeedsam@gmail.com





# தமிழ் தேசியத்துக்கு அர்த்தம் தெரியாத சாணக்கியன்

நான் ஒரு முன்னாள் போராளி . விடுதலைப்புலிகள் அமைப்பில் துப்பாக்கி தூக்கிய ஒரு நபர் என்று எல்லோருக்கும் தெரியும். துப்பாக்கி தூக்குவது என்பது ஒயில் போட்டுவிட்டு துப்பாக்கி சாத்திவைப்பது அல்ல. துப்பாக்கி என்றால் சுடும். எவரை சுடுவது என்பது ஒரு தர்மம்.

இவ்வாறான துப்பாக்கிகளை எமக்கு யார் கொடுத்தார்கள் என்பது இவ்விடத்தில் முக்கியம்.யார் இவ்வாறான துப்பாக்கிகளை தூக்குவதற்கு எமக்கு சந்தர்ப்பத்தை உருவாக்கியவர்கள்.

இவ்வாறான விடயங்கள் எல்லாம் மறந்துபோய் தமிழ் தேசியத்துக்கு அர்த்தம் தெரியாத சாணக்கியன் எல்லாம் வந்து எமது மக்களுக்கு தேசியத்தை

02 ஆம் பக்கத்தில்...









# தமிழரசுக் கட்சி என்பது ஜனநாயகம் இல்லாத கட்சி

இலங்கை தமிழரசுக்கட்சி என்பது ஜனநாயகம் இல்லாத கட்சி, அதற்குள் ஜனநாயகம் இல்லாத செயற்பாடுகளே இடம் பெற்றுக் கொண்டிருப்பதாக முன்னாள் இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளையின் செயலாளரும், தற்போது தமிழ் மக்கள் கூட்டணியின் மான் சின்னத்தில் போட்டியிடும் மிதிலைச் செல்வி பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி மந்திகை பகுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...







## பாராளுமன்றத் தேர்தல்; 13- 14 பாடசாலைகளுக்கு விடுமுறை!

அனைத்துப் பாடசாலைகள் 13 ஆம் திகதி மூடப்பட்டு மீண்டும் 18 ஆம் திகதி திறக்கப்படும். வாக்கெடுப்பு நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகள் 12 ஆம் திகதி பாடசாலை நிறைவடைந்ததும் தேர்தல் பணிக்காகப் பாடசாலைகளை ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சங்கு வேட்பாளர் பிரகாஷ்ஷின் பொத்துவில் அலுவலகம் திறந்து வைப்பு




**( வி.ரி.சகாதேவராஜா)**

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் இராஜகுமார் பிரகாஷ்ஷின் பொத்துவில் பிரதேச தேர்தல் பிரச்சார அலுவலகம் செவ்வாய்க்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் பிரகாஷ் அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.



விழாவில் முதன்மை வேட்பாளர் ச.நேசராசா உள்ளிட்ட வேட்பாளர்கள் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அங்கு பிரச்சாரக் கூட்டம் இடம்பெற்றது. அவ் பகுதியில் வசிக்கும் அதிகளவான மக்கள் கலந்து கொண்டனர். வேட்பாளர் அவர்களால் மக்களுக்கு தனது எதிர்கால நடவடிக்கை பற்றி தெளிவூட்டினார்.

விநாயகபுரத்திலும் அலுவலகத் திறப்பு விழா இடம் பெற்றது.

## தமிழரசுக் கட்சி என்பது ஜனநாயகம் இல்லாத கட்சி

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை தமிழரசு கட்சி என்பது ஜனநாயகம் இல்லாத கட்சி, அங்கு ஜனநாயகம் இல்லாத செயற்பாடுகளே இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக மத்திய குழு எனும் பெயரால் ஒரு சிலரே தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்வதாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய போராட்டங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது கூட அப்பகுதியால் தாண்டி செல்வார்கள். அதில் நின்று போராடுவதோ அல்லது ஏனென்று கேட்பதோ இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் பெண்களை வைத்து ஆண்கள் தமக்கான வாக்கினை பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்ததுடன், இவ்வாறான பல்வேறு சம்பவங்களால் தான் அதிலிருந்து விலகி பெண்களுக்கு சம உரிமை கொடுக்கும் தமிழ் மக்கள் கூட்டணியில் அதாவது மான் சின்னத்தில் பேட்டியிடுவதாகவும் தெரிவித்தார்.

## தமிழ் தேசியத்துக்கு அர்த்தம் தெரியாத சாணக்கியன்

கற்பிக்கின்ற சந்தர்ப்பத்தை கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து நாங்கள் வெட்கப்படுகின்றோம்.

என தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி வேப்பையடி 15ஆம் கிராமம் பகுதியில் விக்னேஸ்வரன் ஆதரவணி தலைமையில் நாவிதன்வெளி கிராம பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பு நாவிதன்வெளி பிரதேச ஆலயங்களின் நிர்வாகிகள் விளையாட்டு கழகங்கள் கட்சியின் பிரதேச மற்றும் கிராமிய குழுக்களின் ஒருமித்த ஒழுங்குபடுத்தலில் ஆசிரியர் மு.விக்னேஸ்வரனை ஆதரித்து நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது, ஜேவிபி அரசுடன் இணைந்து அமைச்சரவையில் அங்கம் வைப்பது பற்றி சுமந்திரன் சாணக்கியனும் இன்று சொல்கிறார்கள்.இவ்வாறான தடம் புரள்வு இவர்களுக்கு எவ்வாறு வந்தது. இந்த மக்களை அழித்த ஒரு கட்சி அது.

இவ்வாறு இருந்த அக்கட்சி எம்மைப் பார்த்து முன்னாள் ஆயுதக் குழுக்கள் என அவர்கள் கூறுகின்றார்கள். அமைச்சரவையில் ஆயுதக் குழுவை சேர்க்க மாட்டார்களாம் சேர்க்கவும் விடமாட்டார்களாம்.நான் முன்பே கூறியிருக்கின்றேன் அரசியலில் நிரந்தரம் ஒன்றுமில்லை அதாவது நண்பனும் இல்லை எதிரியும் இல்லை.அதே போன்று இவர்களுக்கு சொல்ல வேண்டிய விடயம் ஒன்று இருக்கிறது.

நான் ஒரு முன்னாள் போராளி . விடுதலைப்புலிகள் அமைப்பில் துப்பாக்கி தூக்கிய ஒரு நபர் என்று எல்லோருக்கும் தெரியும். துப்பாக்கி தூக்குவது என்பது ஒயில் போட்டுவிட்டு துப்பாக்கி சாத்தி வைப்பது அல்ல. துப்பாக்கி என்றால் சுடும்.

எவரை சுடுவது என்பது ஒரு தர்மம்.இவ்வாறான துப்பாக்கிகளை எமக்கு யார் கொடுத்தார்கள் என்பது இவ்விடத்தில் முக்கியம்.யார் இவ்வாறான துப்பாக்கிகளை தூக்குவதற்கு எமக்கு சந்தர்ப்பத்தை உருவாக்கியவர்கள்.

இவ்வாறான விடயங்கள் எல்லாம் மறந்து போய் தமிழ் தேசியத்துக்கு அர்த்தம் தெரியாத சாணக்கியன் எல்லாம் வந்து எமது மக்களுக்கு தேசியத்தை கற்பிக்கின்ற சந்தர்ப்பத்தை கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து நாங்கள் வெட்கப் படுகின்றோம்.

ஆகவே எமது அன்பு மக்களே இவர்கள் காலத்துக்கு காலம் தேவைக் கேற்றால் போல் பல்வேறு புரளிகளை எழுப்புவார்கள்.

இது தவிர பிள்ளையானுக்கும் ஈஸ்டர் குண்டு தாக்குதலுக்கும் சம்பந்தமாம். சாணக்கியன் சொல்கின்றார்.

ஒரு இஸ்லாமிய மகன் சொல்லியிருந்தால் பரவாயில்லை. உங்களுக்கு தெரியும்.தெமட்டகொட என்ற இடத்தில் உள்ள ஒரு தொழிலதிபர் ஒருவர் ஒரு ஹோட்டலில் இறந்த இடம்பெற்ற குண்டு தாக்குதலில் சம்பந்தப்பட்டிருக்கின்றார்.

அவர் கடந்த கால பாராளுமன்ற தேர்தலில் ஜேவிபி கட்சி சார்பாக தேசிய பட்டியலில் இருந்திருக்கின்றார்.பெயரை மறந்துவிட்டேன். அவர் ஒரு பெரிய வியாபாரி.அவரது இரு மகன்களும் அச்சம்பவத்தில் இறந்து விடுகின்றார்கள்.

இவ்வாறு இறந்தவர்களில் ஒருவரான இன்ஷாப் என்பவரின் தெமடகொட வீட்டுக்கு காவல் அதிகாரிகள் வருகின்ற போது அந்த வீட்டில் இருந்த பெண்மணி இரண்டு குழந்தைகளோடு தனது வயிற்றில் உள்ள மற்றுமொரு குழந்தையுடன் வெடித்து சிதறுகிறார். எவ்வாறு இந்த சம்பவம் நடக்கின்றது. நன்றாக படித்த ஒரு பொறியியலாளரின் மனைவி . பணத்தில் உயர்வான குடும்பம்.

இவ்வாறு இறந்த போகின்றது என்றால் இந்த குடும்பத்தினரை பிள்ளையான் மூளைச்சலவை செய்வாரா. விடுதலைப் புலிகளுக்கு கரும்புலியாகி வெடிப்பதற்கு 30 ஆண்டுகள் சென்றிருக்கின்றது. இந்த முப்பது ஆண்டுகளுக்கு பின்னர் போர்க் என்பவர் மாங்குளத்தில் முதலாவது கரும்புலி தாக்குதல் மேற்கொண்டார்கள். இவ்விடத்தில் இந்த விடயத்தை ஏன் சொல்கின்றேன் .

இவ்வாறான வரலாறுகள் தெரியாத சாணக்கியன் போன்றவர்கள் பசப்பு வார்த்தைகளை தொடர்ச்சியாக கூறி வருகிறார்கள். அதற்கு ஊதுகுழலாக எம்மோடு இருந்த நாங்கள் நம்பி இருந்த மருதமுனை பகுதியைச் சேர்ந்த முன்னாள் ஒரு அமைப்பின் தலைவர் பத்மநாபாவுடன் இந்தியாவில் மரணித்த ஒருவரின் மகன் ஆசாத் மௌலானா இருந்தார். அவரை நம்பிக்கையானவர் என்று நான் நன்றாக பார்த்தேன். இந்த உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் பின்னர் அவர் உயிர் வாழ்வதற்காக இலங்கையில் சில பெண்களோடு பிரச்சனை என்று வெளிநாட்டிற்கு சென்றார்.

அவர் அங்கு சென்று அரசியல் தஞ்சம் பெறுவதற்கு எடுத்த ஆயுதம் ஈஸ்டர் குண்டு தாக்குதலில் பிள்ளையானுக்கு தொடர்பு உள்ளது என ஒரு பொய்யை உருவாக்கினார். அதனை சர்வதேச ரீதியாக இயங்கும் சனல் 4 என்ற ஒரு ஊடகமும் என்னை அரசியல் ரீதியாக அழிக்க துடிக்கின்ற சில சக்திகளும் விடயத்தை தூக்கிப் பிடித்தார்கள்.

இதனால் சனல் 4 என்ற ஊடகம் இதனால் பிரபல்யம் அடைந்தது.மிக அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பில் உதய கன்வன்வில என்பவர் சொல்லியிருக்கின்றார். ஜனாதிபதி ஆணைகுழு அறிக்கை சொல்லி இருக்கின்றது. எல்லாம் பச்சப்பொய். இதனை விசாரிக்க முடியாது .

அதே போன்று குறித்து சம்பவத்தை வெளியிட்ட சனல் 4 என்ற ஊடகம் அந்த செய்தியினை முற்றாக நீக்கி இருக்கின்றது. இவ்வாறான விடயத்தை யாருமே வெளியில் சொல்வது கிடையாது. ஏனென்றால் அரசியலுக்காக சகல பிரச்சினைகளை எல்லாம் இழுத்து வடுவார்கள். கோடீஸ்வரன் என்பார்கள் துவக்கு வைத்திருந்தவர் என்பார்கள்.

பிள்ளையானை சிறைச்சாலையில் அடைக்கப்படுவார் என்பார்கள். மட்டக்களப்பில் சில அம்மாமார் கூறியிருக்கிறார்கள். பிள்ளையான் உங்களை சிறையில் அடைத்திருக்கின்ற போது தான் வாக்குகள் நாங்கள் இட்டு வெளியே எடுத்து இருக்கின்றோம்.

இனியாவது அடைக்கப் போகிறார்கள்? ஏனெனில் உளவியல் ரீதியாக எம்மை யாழ்ப்பாண சக்திகளும் சவால் விடுகின்றோம் என்பதற்காககிழக்கு மாகாணத்தில் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காத சில அரசியல்வாதிகளும் எம்மை அழிக்க நினைக்கின்றார்கள்.

அந்த சக்திகள் எல்லாம் எமது மக்களுக்கு எதிரானவர்கள். நாம் இந்த மக்களுக்கு உண்மையாக நேர்மையாக 16 வயதில் இருந்து இன்று 50 வயது வரைக்கும் எமது பணிகளை சிறப்பாக செய்து வந்திருக்கின்றோம் அதில் நாங்கள் எங்கும் பிழை விட்டது கிடையாது.

யாருக்கும் அநியாயம் செய்தது கிடையாது எவரையும் ஏமாற்றியது கிடையாது ஆனாலும் இந்த அரசியல் சூழலில் எதிர்பார்ப்புடன் இருக்கின்ற மக்களுக்கு ஆங்காங்கே இருக்கின்ற சிறு சிறு பிழைகளை வைத்துக்கொண்டு பெரிதாக உருவாக்குகின்றார்கள். ஆனால் இக்காலத்தில் பொறுப்பு மிக்க அரசியல் கட்சி ஒன்றை தலைவராக எமது பணி கிழக்கு மாகாணம் பூராகவும் விஸ்தரிக்கப்படும்.

அதில் ஒரு அங்கமாக இந்த தேர்தலை நான் பார்க்கின்றேன். இந்த தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வெற்றி என்பது கிழக்கு தமிழர்களின் வெற்றியாகும். ஆதித்தமிழன் உறுதியாக வாழ வேண்டும் என்றால் நாங்கள் எல்லோரும் ஒன்று பட்டு கிழக்கு மாகாணத்திற்கான தனித்துவமான அரசியலை முன்னெடுக்கின்ற தமிழ் மக்கள் விடுதலை புலிக் கட்சியை பாதுகாத்து தூக்கிப் பிடித்து அதனை வெற்றி பெறச் செய்ய வேண்டும் அந்த ஆணையிலிருந்து அதிகாரத்துடன் நாங்கள் பேரம் பேச வேண்டும். அதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அம்பாறை வாழ் மக்கள் எமக்கு அழியுங்கள் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.



# கனியவள மணல் அகழ்வு; மக்கள் போராட்டம்





**( வாஸ் கூஞ்ஞ)**

கனியவள மணல் அகழ்வுக்கான நடவடிக்கையாக கடற்கரையோரப் பகுதியில் சுற்று சூழல் தாக்கம் தொடர்பாக மதிப்கடு அறிக்கை மேற்கொள்ளும் நோக்குடன் கொழும்பிலிருந்து பல வாகனங்களில் வருகை தந்த அதிகாரிகளையும் இவர்களுடன் வருகை தந்த மன்னார் அதிகாரிகளையும் இப்பகுதி மக்களும் பொது அமைப்புக்ளும் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்ல அனுமதிக்காது எதிர்ப்பு தெரிவித்த சம்பவம் இடம்பெற்றது. நீதிமன்ற உத்தரவு பெற்று பணியை தொடர பொலிசார் எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

இச்சம்பவம் புதன்கிழமை (06) காலை மன்னார் தீவில் பிரதேச செயலகப் பிரிவில் ஓலைத்தொடுவாய் வளனார் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது;

சம்பவம் அன்று (06) மேற்குறிப்பிட்டப் பர்தியில் மக்களின் நீண்டகால எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இப்பகுதியில் கனியவள மணல் அகழ்வுக்கான நடவடிக்கையாக இப்பகுதிக்கு அதிகாரிகள் வருகை தர இருப்பதாக தெரிய வந்ததும் இப்பகுதி மக்களும் பொது அமைப்புக்களும் காலை நேரத்துடன் சம்பவ இடத்துக்கு படையெடுத்து இருந்தனர்.

இதைத் தொடர்ந்து பல வாகனங்களில் அதிகாரிகள் இவ்விடத்துக்கு கனியவள மணல் அகழ்வு செய்யும் முகவருடன் பொலிஸ் உயர் பாதுகாப்புடன் அவ்விடத்துக்கு வருகைத் தந்திருந்த பொழுது பொது மக்கள் பாதைகளை மறித்து குறிப்பிட்ட இடங்களுக்கு செல்லவிடாது தடுத்திருந்தனர்.

அங்கு குழுமியிருந்த பொதுமக்கள் , அரசியல் வாதிகள், பொது அமைப்புக்களைச்சார்ந்தவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் வருகை தந்திருந்த அதிகாரிகளுடன் தர்க்கப்படுகையில் மன்னாரில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள காற்றாலை அமைப்பால் மன்னார் தீவு மழை பெய்கின்றபோது வெள்ளத்தால் மூழ்கி வருகின்றது. இந்த நிலையில் கடற்கரையோரத்தில் கனியவள மணல் அகழ்வும் இடம்பெற்றால் மன்னார் தீவு சொற்ப காலத்தில் கடலில் மூழ்கும் அபாய நிலை உருவாகும். கடந்த வருடம் (2023) நவம்பர் மாதம் இவ்வாறான செயற்பாட்டில் அதிகாரிகள் இங்கு ஈடுபட்டபோது மக்களால் தடை செய்யப்பட்டதையும் நினைவூட்டினர்.

அத்துடன் தற்பொழுது தேர்தல் காலத்தில் முன்னைய அரசு முன்னெடுத்த இவ்வாறான மக்களுக்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபடாது தேர்தல் முடிந்த பின் நாங்கள் புதிய ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்று தீர்வு பெறும் வரைக்கும் இன்றைய செயற்பாட்டை நிறுத்தக்கோரி வேண்டுகோள் விடுத்தனர்.

இதைத் தொடர்ச்து பொலிசார் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் அனுமதி பெற்று கனியவள மணல் அகழ்வுக்கான நடவடிக்கையாக கடற்கரையோரப் பகுதியில் சுற்று சூழல் தாக்கம் தொடர்பாக மதிப்கடு அறிக்கை மேறகொள்வதற்காக இன்றைய தினம் (06) முயற்சிகள் மேற்கொண்டு மாலை மன்றில் விசாரனைண நடைபெற்றபோது மக்கள் சார்பில் சட்டத்தரணிகள் முன்னிலையாகியதுடன் பொலிசாரும் தாக்கல் செய்த மனுவை கைவாங்கியதாலும் அது நீதிமன்றத்தால் தொடர்ந்து மதீப்பீடு செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

# போராட்டத் தடைக்கு மன்றில் உத்தரவுக்கு விண்ணப்பித்த பொலிசார் கைவாங்கினர்

**( வாஸ் கூஞ்ஞ)**

கனியவள மணல் அகழ்வுக்கான நடவடிக்கையாக கடற்கரையோரப் பகுதியில் சுற்று சூழல் தாக்கம் தொடர்பாக மதிப்கடு அறிக்கை மேற்கொள்ளும் நோக்குடன் அதிகாரிகள் ஈடுபட வந்தபொழுது பெயர் குறிப்பிடப்பட்ட அரசியல் வாதிகள் மதக் குருக்களுக்கு தடை உத்தரவு வழங்க வேண்டும் என பொலிசாரால் மன்றுக்கு கொண்டு வரப்பட்ட வழக்கு கைவாங்கப்பட்டது.

புதன்கிழமை (06) காலை மன்னார் தீவில் மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் ஓலைத்தொடுவாய் வளனார் பகுதியில் கனியவள மணல் அகழ்வுக்கான நடவடிக்கையாக கடற்கரையோரப் பகுதியில் சுற்று சூழல் தாக்கம் தொடர்பாக மதிப்கடு செய்ய வந்தவர்களுக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த எதிர்ப்புக்கு காரணகத்தாக்களாக காணப்பட்தாக தெரிவித்து சட்டத்தரணி எஸ்.டினேசன் , முன்னாள் எம்.பி.செல்வம் அடைக்கலநாதன் . மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி எஸ்.மாக்கஸ் அடிகளார் மற்றும் மன்னார் சிரேஷ்ட அருட்பணியாளர் எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் ஆகியோருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை கோவை 106 பிரிவின் கீழ் மன்னார் பொலிசார் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் ஒன்றை முன்னெடுத்தனர்

இது தொடர்பாக பாதிப்படைந்த மக்கள் சார்பாக மன்றில் முன்னிலையாகிய சிரேஷ்ட சட்டத்தரணி பி.ணனிஸ்வரன் தெரிவிக்கையில்; அதாவது கனியவள மணல் அகழ்வுக்கான நடவடிக்கையாக கடற்கரையோரப் பகுதியில் சுற்று சூழல் தாக்கம் தொடர்பாக மதிப்கடு அறிக்கை மேற்கொள்ளும் நோக்குடன் அதிகாரிகள் ஈடுபட முனைந்தபொழுது இதை தடைசெய்யும் நோக்குடன் வீதியில் மரங்களை போட்டு அவர்கள் செல்வதற்கு



மக்கள் தடைகள் போட்டு இருந்தனர்.

இதனால் பொது தொல்லைகள் ஏற்படுத்தப்பட்டமையாலும் சட்டத்தரணி எஸ்.டினேசன் , முன்னாள் எம்.பி.செல்வம் அடைக்கலநாதன் . மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் எஸ்.மாக்கஸ் அடிகளார் மற்றும் மன்னார் சிரேஷ்ட அருட்பணியாளர் எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் ஆகியோர் மக்களை ஒன்றுத் திரட்டி அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் தன்மையில் இவர்கள் ஈடுபட்டார்கள் என தெரிவித்து இவர்களுக்கு எதிராக மன்னார் பொலிசாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன் போடப்பட்ட தடைகளை நீக்கும்படியும் கடமையை மேற்கொள்ள வந்தவர்களுக்கு தகுந்த பாதுகாப்புடன் அவர்களின் கடமைகளை முன்னெடுக்கவும் அனுமதிக்க வேண்டும் எனவும் பொலிசாரின் விண்ணப்பம் காணப்பட்டது.

இது தொடர்பாக மன்றில் பொது மக்கள் சார்பாக மன்னார் சிரேஷ்ட சட்டத்தரனி டெனிஸ்வரன் ஆகிய எனது தலைமையில் பத்து சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகி இருந்ததுடன்; மன்றில் தாங்கள் கருத்துக்களை இவ்வாறு முன்வைத்திருந்தோம்.

கடந்த வருடம் நவம்பர் மாதமும் இவ்வாறான செயற்பாடு முன்னெடுக்கப்பட்டபோது இதே மாதிரி மக்கள் போராட்டம் இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து அது நிறுத்தப்பட்டது.

அத்துடன் கடந்த திங்கள் கிழமையும் ஆராய்ச்சி செய்யப் போகின்றோம் என தெரிவித்து இவ்வாறான ஒரு செயற்பாடு பிரத்தியேக வழக்காக கொண்டு வரப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கானது மன்னார் கோட் நம்பர் 2 இல் மன்னார் பிரஜைகள் குழுவுக்கு எதிராகவும் தடை உத்தரவு செய்யும்படி கொண்டு வரப்பட்டது.

இங்கு இந்த வழக்கில் இரு சாராரின் கருத்துக்களையும் நீதவான் விரிவாக கேட்டறிந்தபின் வழக்கை தள்ளுப்படி செய்திருந்தார்.

இவற்றை பொது மக்கள் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணிகள் இந்த வழக்கில் ஆதாராமாக முன்வைத்திருந்தனர்.

ஆகவே பொலிசார் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது போல பொது மக்கள் போக்குவரத்துக்கு எவ்வித தடையும் ஏற்படுத்தவில்லை.

ஆனால் மன்னார் வளத்தை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும் மன்னார் ஒரு சிறிய தீவு இது அழிவுறா நோக்குடன் எதிர்கால சந்ததினரின் நலன் நோக்கியே இங்கு மணல் அகழ்வு எற்படக்கூடாது என்ற நோக்கிலே பொது மக்கள் இவ்வாறு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நேரத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் தகவல் பொலிசாருக்கு கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து உடனே பொலிசார் தாக்கல் செய்த இந்த வழக்கு உடனே பொலிசாரால் கைவாங்கப்பட்டதாக இந்த வழக்கில் பொது மக்கள் சார்பாக மன்றில் முன்னிலையாகிய சட்டத்தரணி பி.டெனிஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

# தமிழ் மக்களின் தீர்வுக்காக

## விருந்துபசாரத்தை தவிர்த்தவர் டக்ளஸ்

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த காலத்தில் சீனாவிற்கு அமைச்சர்கள் குழு ஒன்று மாநாடு ஒன்றிற்காக சென்றிருந்தனர்.

குறித்த மாநாடு நிறைவுற்றதன் பின்னர் சகோதர இன அமைச்சர் ஒருவரினால் டக்ளஸ் தேவானந்தா அவர்களை விருந்து உபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டிக்கொண்டார். விருந்து உபசாரம் எப்படி இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்ட டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சக அமைச்சரிடம், தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் வரை நான் எந்த ஒரு விருது உபசாரத்திலும் மனமகிழ்ச்சியுடன் கலந்து கொள்ள மாட்டேன் என மறுப்பு தெரிவித்து இருந்தார்.

குறித்த சக அமைச்சர், அப்படியானால் நீங்கள் வாழ்நாளில் எந்த ஒரு விருந்து உபசாரத்திலும் கலந்து கொள்ள மாட்டீர்கள் என நகைச்சுவையாக தெரிவித்து இருந்தார். அதனை புன்முறுவலுடன் ஏற்றுக் கொண்ட டக்ளஸ் தேவானந்தா அவர்கள்



அந்த விருந்து உபசாரத்தை தவிர்த்துக் கொண்டார்.

அவருடைய மனதில் தமிழ் மக்களுக்கான தீர்வு கிடைக்கும் வரை களியாட்டங்களில் விருந்து பசாரங்களில் கலந்து கொள்ள போவதில்லை என உறுதியாக இருந்து நிச்சயம் தமிழ் மக்களுக்கான அடிப்படை உரிமை கிடைக்கும் வரை அவருடைய அரசியல் போராட்டம் தொடரும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர் பாபு சர்மா தெரிவித்திருந்தார்.

# நாங்கள் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவோம்!



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் கிடைப்பதாக இருந்தால் அது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூலமாகத்தான் கிடைக்கும்.

எந்தக் கட்சியில் போட்டியிட்டாலும் ஒரு முஸ்லிம் எம்.பி. வர முடியாது என்று முன்னாள் ஆளுநரும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

ஓட்டமாவடி - நாவலடி கேணிநகர் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

ஒருவர் எம்.பி. ஆக வேண்டுமென்றால் 45,000 க்கும் மேற்பட்ட வாக்குகளை எடுக்க வேண்டும். காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி உள்ளிட்ட பிரதேச மக்கள் ஒன்றிணைந்தால் மாத்திரம்தான் எம்.பி.எடுக்க முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பகுதியில் இம்முறை 90,000 வாக்குகள் அளிக்கப்படவுள்ளன.

அதில், 55,000 பேர் முஸ்லிம் காங்கிரசுக்கு வாக்களித்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இந்தத் தேர்தலில் மேலதிகமாக ஒரு பாராளுமன்ற உறுப்பினரை பெறுவதற்காக வேண்டிதான் நாங்கள் கூட்டம் போட்டுப் பாடுபடுகின்றோம்.

எங்களது கட்சிக்கு ஒரு எம்.பி. வருவதென்றால் நாங்கள் கூட்டமெல்லாம் போடத் தேவையில்லை. ஏனென்றால் எங்களது கட்சிக்கு இலகுவாக 44,000 வாக்குகள் கிடைக்கும்.

நாங்கள் கூட்டம் போட்டு பேசுவதெல்லாம் 55,000 க்கு மேற்பட்ட வாக்குகளை எடுத்து இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிதான்.

பாராளுமன்ற தேர்தலுக்குப் பின்னர் ஆட்சி அமைக்க ஜனாதிபதிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேவை.

ஆட்சி அமைப்பதற்கு தேவை என்றால் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவோம். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் நான் பாராளுமன்றத்தில் 30 வருடங்களுக்கு மேலாக ஒன்றாக இருந்துள்ளேன். நான் அவருடன்தான் காலை, பகல், இரவு உணவுகளை உண்டுள்ளேன். நாங்கள் எப்பொழுதும் ஜனாதிபதியின் கட்சிதான்.

நாங்கள் அரசாங்கத்துடன் இருந்து பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி நல்ல விடயங்களுக்கு ஆதரவு வழங்குவோம்.

ஜனாதிபதி ஊழல், இலஞ்சம் ஆகியவற்றை ஒழிப்பதாக சொல்லி இருக்கிறார்.

அத்துடன், பொருட்களின் விலைகளைக் குறைத்து, அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாகவும் சொல்லி இருக்கிறார். இது போன்ற பல நல்ல விடயங்களை சொல்லி இருக்கிறார் அதனை நாங்கள் வரவேற்கின்றோம் என்றார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 118 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு!!

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

பாராளுமன்ற தேர்தல் 2024 இற்கான திகதி தேர்தல்கள் ஆணைக் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நவம்பர் 05 திகதி மதியம் 12 மணி வரைக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் சட்டவிதிகளை மீறி செயற்பட்டமை தொடர்பாக இதுவரை 118 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மட்டக்களப்பு ஒல்லாந்தர் கோட்டையில் அமையப்பெற்றுள்ள தேர்தல் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் அலுவலகம் அறிவித்துள்ளது.




இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள 118 முறைப்பாடுகளில் 84 முறைப்பாடுகளிற்கு தீர்வு காணப்பட்டுள்ளதுடன் மிகுதி 34 முறைப்பாடுகள் தொடர்பான விசாரனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், சட்டவிரோத சுவரொட்டிகள், பாதாதைகள் காட்சிப்படுத்தல், துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல் போன்ற சட்டவிரோத செயற்பாடுகள் பதிவாகியுள்ளன.

இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதி மீறல் அடிப்படையில் சாதாரண தரமுடையவை என தேர்தல் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை பிரிப்பதற்காக சுயேட்சைக் குழுக்களும் சிறு கட்சிகளும்





(க.ருத்திரன்)

நேற்று பெய்த மழைக்கு முளைத்த காளான்கள் போல் நிறைய சுயேட்சைக் குழுக்களும் சிறு,சிறு கட்சிகளும் தென்னிலங்கை தேசிய அரசால் அல்லது மற்றுமொரு சமூகத்தால் திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களின் வாக்குப் பலத்தை பிரிப்பதற்காக இங்கு களமிறக்கப்பட்டுள்ளதாக நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் அரசு கட்சியில் போட்டியிடும் வேட்ப்பாளர் வைத்தியர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்தார்.

இன்று பிரதேச செயலாளர் பிரிவின் கூழாவடி கிராமத்தில இடம்பெற்ற தேர்தல் பரப்புரை நிகழ்வில் மக்கள் முன் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

20 இற்கு மேற்பட்ட சுயேட்சை குழுக்களையும் சிறி ய கட்சிகளையும் களமிறக்கியுள்ளது.இவர்கள் கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கான அதிகாரம் கேட்டோ, குரல் கொடுத்தோ அல்லது போராட்டங்களை சந்தித்திருக்கிறார்களா என்று கேட்டால் இல்லை.ஒவ்வொரு கட்சியும் 500-1000 வாக்குகளைப் பெற்று 25000-300000 வரையான தமிழ் மக்களின் வாக்குகளை இல்லாதொழித்து எங்களுடைய நாடாளுமன்ற ஆசனத்தை இல்லாமல் செய்வதே அவர்களது நோக்கமாகும். எனவே நாங்கள் அனைவரும் இந்த விடயத்தில் மிக கவனமாக இருக்கவேண்டும்.

தென்னிலங்கையில் என்ன அரசுகள் மாறினாலும் அவர்களது அடிப்படைக் கொள்கை மாறுவதில்லை.அவர்களது அடிப்படையான சித்தாந்தம் என்னவென்று தெரியுமா,தமிழ் பேசும் மக்கள் தங்களது உரிமைக்காக போராடாது தமிழ் தேசியத்தின் குரலை நெறித்து சனவிகிதாசாரத்தை மாற்றியமைத்து மாவட்டங்களிலே சனத்தொகை பரம்பலை குறைத்து எங்களுடைய நாடாளுமன்றத்தில் தற்போதைய காலச் சூழ் நிலையில் பேரம் பேசும் பலத்தை இல்லாமல் செய்வதாகும்.

அதற்குரிய பல நிகழ்சி திட்டங்கள் அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மிகத் தெளிவாக கட்டமைக்கப்பட்டு இன்று ஒரு ஆசனத்தைக் கூட பெற்றுக்கொள்வதற்கு மிகவும் போராட வேண்டிய இக்கட்டான காலச் சூழலில் நாம் இருக்கின்றோம். அம்பாறையை எடுத்துக்கொண்டால் பிரதேச செயலகமொன்றில் கணக்காளர் ஒருவரை நியமிப்பதற்கு போராட வேண்டி நிற்கிறது.எதிர்காலத்திலே எங்களுடைய தேசிய இனத்திறகு மிகவும் முக்கியமானது நிலமும் மொழியும் ஆகும்.இன்று நிலத்தையும் மொழியையும் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.புதிதாக வந்த ஜனாதிபதி அவர்கள் தமது நிகழ்சி நிரலில் தமிழ் தேசியத்தைப் பற்றியோ கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்தைப் பற்றியோ மனிதாபிமான அடிப்படையில் கூட கருத்து தெரிவிக்க தயாரில்லை.அவர் பெரிதும் நம்பி இருப்பது தென்பகுதி மக்களின் வாக்குகளை என்றபடியால் அவர் கருத்து தெரிவிக்க தயாரில்லாத நிலையில் உள்ளார்.தென்னிலங்கை மக்களது மனங்களில் மாற்றம் ஏற்பபாடாத போது அவர் தமிழ் மக்களுக்காக எந்த விடயத்திலும் முகம் கொடுக்க தயாரில்லை.கடந்த காலத்தில் கூட ஜே.வி.பியினர் என்ன செய்திருந்தார்கள்.வடகிழக்கு இணைப்பை நீதி மன்றம் நாடி பிரித்தார்கள்.இலங்கை இந்திய ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார்கள்.சுணாமியால் பாதிக்கப்பட்டபோது எற்படுத்தப்பட்ட பொருளாதார கட்டமைப்பை நீதி மன்றம் நாடி தடை விதித்தார்கள்.எனவே இந்த அரசாங்கம் எங்களது உரிமைகள் சார்ந்த விடயத்தில் எதையும் தரப்பேவதில்லை என்பதை நாங்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.ஆகவே எங்களது உரிமை சம்பந்தமாக போராடுவதற்காக எங்களது நிலங்களையும் வளங்களையும் காப்பதற்காக தமிழ் பிரதேசமான மட்டக்களப்பிலே விகிதாசார அடிப்படையிலே நான்கு பாடளுமன்ற உறுப்பினரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது மிக முக்கியமான விடயமாகும்.

இன விகிதாசாரத்தைக் அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் பிரதிநித்துவம் பெறுவதில் எங்களுக்கு பிரச்சினை இல்லை.ஆனால் எங்களின் வாக்குகளை கொண்டு எங்களின் இனவிகிதாசாரத்தைக் கொண்டு மற்றுமொரு சமூகம் பாராளுமன்றத்தை தேர்ந்தெடுப்பதற்கு நாங்கள் விட்டு விட முடியாது.தென்னிலங்கை தேசிய கட்சி வேட்பாளர் பட்டியலில் 5 பேரை தமிழர்களாகவும் 3 பேரை முஸ்லிம்களாகவும் கொண்டு முஸ்லிம் பிரபல்லியமானவர்களை தேர்ந்தெடுப்பதற்காக 5 தமிழர்களின் வாக்கு பலத்தை கடந்த 20 வருட காலமாக பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது தெளிவான உண்மை.அகவே நாங்கள் தென்னிலங்கை தேசிய கட்சிகளுக்கு வாக்களிக்கக் கூடாது என தெளிவான முடிவு எடுக்கவேண்டும்.திசை காட்டியாக இருக்கலாம் ரெலிபோனாக இருக்கலாம்,எந்த கட்சிகளாக இருந்தாலும் தமிழ் பேசும் உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளுக்கே நாங்கள் வாக்களிக்க வேண்டும்.

எனவே நாங்கள் அனைவரும் அந்த விடயத்தில் மிக கவனமாக இருக்க வேண்டும். எனவே வன்முறை இல்லாத ஊழல் லஞ்சம் இல்லாத கட்சியாக தமிழ் தேசியத்துடன் தமிழ் மக்களுக்காக பயணிக்கின்ற ஒரே ஒரு கட்சியாக தமிழ் அரசு கடசி மாத்திரமே உள்ளது.என்றார்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயிலுக்கு மாகாண சாஹித்ய விருது!

(மட்டு. துஷாரா)



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள 2024 ஆம் ஆண்டுடின் இலக்கிய விழாவுக்கு, சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் மாகாண சாஹித்ய விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர்பைஷல் இஸ்மாயில், மருத்துவம் சார்ந்த ஆக்கங்களைதுறைசார் வைத்திய நிபுணர்கள் ஊடாக பெற்றுக்கொண்டு, அவற்றை தேசிய பத்திரிகை வாயிலாக, பொதுமக்களுக்கு நோய் பற்றிய தெளிவையும், அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெற்றுக்கொள்ளலாம் என்ற விழிப்புணர்வுகளையும்

கடந்த பல வருடங்களாக எழுதி வருகின்ற அதேவேளை, அவற்றை நூல் வடிவிலும் தொகுத்து வழங்கி வருகின்றவராக இருக்கின்றார்.

அவ்வாறு தொகுத்தெழுதிய நூல்களில் ஒன்றான 'லன் தரும் மருத்துவம்' என்ற நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தெரிவுசெய்யப்பட்டு அந்நூலுக்கான 'சாஹித்ய விருது'கிடைக்கவுள்ளதும்,

கடந்த வருடம் மாகாணத்திலுள்ள எழுத்தாளர்களிடம் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கோரிய நூல்களில் இவரின் நூலான 'நலன் தரும் மருத்துவம்' தெரிவு செய்யப்பட்டு குறித்த திணைக்களத்தினால் அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அவர் இதுபோன்ற பல மருத்துவ ஆக்கங்களையும், நூல்களையும் தொடராக எழுதிய வருகின்றவராகவும், அவரினால் தொகுத்தெழுதப்பட்ட 'நோயும் தீர்வும்'என்ற முதலாவது நூல் கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல தேசிய ரீதியில் இவ்வாறு எழுதப்பட்ட முதலாவது நூலாக இருந்ததனால் எல்லா மக்களினாலும் பேசப்பட்டு பாராட்டினையும், வாழ்த்துகளையும் பெற்றமை விஷேட அம்சமாகும்.

# சக படைப்பாளியையும் ஊக்குவிப்பதே ஓர் எழுத்தாளனின் சிறந்த பணியாகும்!

## கனடாவில் அறிவகம் அதிபர் கா.யோ.கிரிதரன் உரை




எழுத்தாளன் தனது படைப்புக்களை மாத்திரமின்றி சக படைப்பாளர்களையும் ஊக்குவித்து, உத்வேகப்படுத்தி பிரசுரப்பதில் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் பணி சிறப்பானது என கனடாவில் நிகழ்ந்த நூல் வெளியீட்டில் கனடா அறிவகம் பாடசாலைகளின் அதிபர் திரு. கா.யோ.கிரிதரன் தெரிவித்தார்.

சக எழுத்தாளர்கள், கவிஞர்களின் படைப்புக்களையும், தொகுப்புக்களையும் முன்நின்று இவர் வெளியீடு செய்திருக்கிறார். வடமராட்சி ஒபரேஷன் லிபரேஷன் படுகொலைகள் எம் மண்ணின் வரலாற்றில் பதியப் பட்ட துயர வரலாறு. உலகையே அதிர வைத்த படுகொலைகளின் களம் அது. அக்கொலைகளை நினைவு கூரும் வகையில் எட்டு இளம் கவிஞர்களின் கல்லறை மேலான காற்று எனும் கவிதைத் தொகுதியினை 1988 ம் ஆண்டு தொகுத்தளித்தவரும் இவரே என திரு. கா.யோ.கிரிதரன் தெரிவித்தார்.

கடந்த வாரம் கனடாவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியிடப்பட்டது. பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன், ஆகிய

ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு ஸ்கார்பரோ ரீகிரியேசன் சென்டர் மண்டபத்தில் நடைபெற்றது.கடந்த நவம்பர் 3ம் திகதி நவம்பர் ஞாயிற்றுக்கிழமை மாலை இவ் வெளியீட்டு நிகழ்வு சிறப்புற நடைபெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் கனடா தமிழ் அறிவகம் மாணவர்களால் தமிழ் வாழ்த்துப் பாடலும், கனடா நாட்டு தேசிய கீதமும் பாடப்பட்டது.

இந்நிகழ்வின் தலைமையுரையை பேராசிரியர். இ. பாலசுந்தரம் அவர்கள் வழங்கினார். அத்துடன் சிறப்புரையை தமிழர் தகவல் ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள் வழங்கினார்.

வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை புகழ்பெற்ற வானெலி அறிவிப்பாளர் திரு. இளங்குமரன், கனடா தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர் திரு. கா. யோ. கிரிதரன், மற்றும் எழுத்தாளர் திருமதி. சிறிரஞ்சினி ஆகியோர் வழங்கினர்.



பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை அரசியல் ஆய்வாளர் திரு. திரு. லெனி மரியதாஸ் அவர்கள் நிகழ்த்தினார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் திரு. மீரா பாரதி அவர்கள் ஆற்றினார். அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை கவிஞர் திரு. அகனி சுரேஷ் அவர்கள் ஆற்றினார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வின் சிறப்புரையையும், நூலாசிரியரின் ஊடக - எழுத்து பற்றி உலகத்தமிழர் ஆசிரியர் திரு. கமல் நவரட்ணம் அவர்கள் வழங்கினார். கனடாவில் நிகழ்ந்த இந்நூல் வெளியீட்டின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கனடா அறிவகம் பாடசாலைகளின் அதிபர் திரு. கா.யோ.கிரிதரன் மேலும் தெரிவிக்கையில், ஈழப்போரின் வலியைச் சுமந்த அகிலன் திருச்செல்வத்தின் கவிதைகள் நூலைத் தொகுத்தவரும் இவரே. அகிலனின் முதலாவது ஆண்டு நினைவாக 1990 ஆண்டு 'மரணம் வாழ்வின் முடிவல்ல' என்ற கவிதைத் தொகுப்பும் வெளிவந்தது.

எழுத்துப் பணிகளில் ஆவணப்படுத்தற் பணிகளில் அதிகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஐங்கரன் விக்கினேஸ்வராவின் பல கவிதைத் தொகுப்புக்கள் 1980களின் இறுதியில் வெளியாயின. இவற்றில் யாழ்ப்பாண நூலக எரிப்பை நினைவு கூர்ந்து வெளியான அணையாத அறிவாலயம் பரந்த கவனம் பெற்ற தொகுப்பாகும்.

வரலாற்றை எழுத்தில் கொண்டு வருவது என்பது இச்சமுதாயத்துக்கு ஒரு படைப்பாளி செய்யும் மகத்தான பணியாகும். இவற்றை ஆவணப் படுத்துவதும் காலத்தின் தேவையாகும்.

சமகாலத்தில் நடப்பவைகளின் பதிவுகள் எதிர்காலச் சந்ததியினருக்கு பெறுமதி வாய்ந்த ஆவணங்களாக கை மாற்றப்படுகிறது.

இப்பணியை திரு ஐங்கரன் அவர்கள் ஒரு சமுதாய நோக்கோடு அமைதியான முறையில் பொறுப்போடு செய்து வருகிறார். திரு ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்களின் மூன்று நூல்கள் சமீபத்தில் வெளியாகியிருக்கின்றன. இலங்கை இதழியலில் சிவகுருநாதன், பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் ஆகிய நூல்களே அவை. அவுஸ்திரேலியாவின் பல மாநிலங்களிலும் இந்நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல்களின் பேசு பொருள் பலரின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றன என கனடா அறிவகம் பாடசாலைகளின் அதிபர் திரு. கா.யோ.கிரிதரன் தெரிவித்தார்.

# நாங்கள் சீறினால் மட்டக்களப்பை விட்டு பிள்ளையான் ஓடவேண்டி வரும்

## கடும் தொனியில் எச்சரித்த புனர்வாழ்வழிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி

நாங்கள் சீறினால் மட்டக்களப்பை விட்டு பிள்ளையான் ஓடவேண்டி வரும் என புனர்வாழ்வழிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் க.இன்பராஜா தெரிவித்துள்ளார்.

பிள்ளையானின் ஆதரவாளர்களினால் தமது வேட்பாளர் மற்றும் அவரது கணவர் தாக்கப்பட்டது தொடர்பில் மட்டு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிவனேசதுரை சந்திரகாந்தன் எங்களுக்கு படம் காட்டக்கூடாது. நாங்கள் புலி. எங்களிடம் செட்டப் காட்டக்கூடாது. பிள்ளையான் அவர்கள் விளங்கி கொள்ள வேண்டும். பிள்ளையான் இன்று வரை திருந்தவில்லை. இதுதான் கடைசியும் முதலுமாக இருக்க வேண்டும்.

ஆட்டை கடித்து மாட்டை கடித்து இறுதியாக புனர்வாழ்வழிக்கப்பட்ட விடுதலை புலி கட்சி வேட்பாளரை கடிக்கின்ற அளவுக்கு இனி வரக்கூடாது. ஏனென்றால் நீர் வந்து என்னதான் இருந்தாலும் எங்களுடைய மக்களுக்கும், எமக்கும் துரோகம் செய்தனீர். ஆனால் நாங்கள் இறுதி யுத்தம் முடியும் வரைக்கும் எங்களுடைய தேசிய தலைவருக்கு துரோகம் செய்யாமல், முள்ளிவாய்க்காலில் வந்து தடுப்பில் இருந்து வந்த 12000 போராளிகள் நாங்கள்.




நாங்கள் சீறினால் மட்டக்களப்பை விட்டு ஓட வேண்டிய நிலைமை வரும். இனி மட்டக்களப்பு மாவட்டம் உன்னுடையது அல்ல. ஒன்றை மட்டும் விளங்கிக் கொள். மட்டக்களப்பு மாவட்டம் எங்களுடைய அம்மா பிறந்த மாவட்டம். அதேபோல கிழக்கும் , வடக்கும் இரண்டு கண்கள். சிவநேசதுறை சந்திரகாந்தன், ஜோசப் பராசிங்கத்தை சுட்டு விட்டு வெளியே வந்த மாதிரி. நொண்டி சாட்டை சொல்லிக்கொண்டு இனி புலி இடமிருந்து தப்பித்து வர முடியாது.

மனித உரிமைகளுக்கு மட்டுமல்லாமல் நாங்கள் தேர்தல் ஆணையாளருக்கும் கடிதம் எழுதி இருக்கின்றோம். அதே மாதிரி ஜனாதிபதி செயலகத்திற்கும் கடிதம் எழுதி இருக்கின்றோம். அதேபோல மட்டக்களப்பு தேர்தல் ஆணையாளர்களுக்கும் வேட்பாளர்கள் அனைவரும் நேரடியாக சென்று வாக்குமூலம் கொடுக்கப் போகின்றோம்.

இவர் ஏற்கனவே ஆயுத குழுவாய் இருந்தவர் இவரிடம் ஆயுதம் இருக்குதோ இல்லையோ அது தெரியாது. எங்களுடைய வேட்பாளர்கள் பயந்து கொண்டு இருக்கின்றனர். புலியான அவர்களிடம் ஆயுதம் களையப்பட்ட வரலாறு இல்லை. பிள்ளையானவர்கள் ஒன்றை விளங்கி கொள்ள வேண்டும். நாங்கள் முன்னால் போராளி. தாக்கப்பட்டவர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்றால் இவர்கள் ஒரு அச்சுறுத்தலை கொடுத்திருக்கின்றனர்.

காரணம் விளங்குகின்றது என்னவென்றால் புலி வருது என்ற உடன் இவர்களுக்கு பயம் வந்துவிட்டது என்ன காரணம் என்றால் இன்றைக்கும் ஏனைய அரசியல்வாதிகளுக்கு இவரை தண்டிக்க முடியாது. ஏனைய அரசியல்வாதி உடைய வாக்கும் இவருக்கு தான் விழும். ஆனால் விடுதலைப் புலிகள் என்ற ஒரு பெயருடன் இன்றைக்கு மட்டக்களப்பு மாவட்டத்தினுடைய புனர்வாழ்வழிக்கப்பட்ட விடுதலை புலிகள் வந்தால் மக்கள் அனைவரினதும் ஆதரவு விடுதலை புலிகளுக்கே கிடைத்துவிடும். பிறகு இந்த துரோக புலிக்கு இடம் இருக்காது. ஆனால் உண்மையான புலிக்கு இடம் இருக்கும். அந்த நோக்கத்தில் ஆட்களை தயார் செய்து தாக்குதல் நடத்தி இருக்கின்றனர்.

இவர் இது போல தொடர்ந்து செயற்பட்டால் அவருக்கு புலிகள் என்றால் யார் என்று காட்டவேண்டிய நிலையேற்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# மலையக மக்களின் இருப்புக்காக,பாதுகாப்புக்காக காங்கிரஸ் வேட்பாளர்களை நிச்சயம் வேற்றி பேற வைக்க வேண்டும்

## வேட்பாளர் ராமேஷ்வரன் தெரிவிப்பு

**(க.கிஷாந்தன்)**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இருப்பதால்தான் மலையகத்தில் காணிகள் பாதுகாக்கப்பட்டுவருகின்றது. காங்கிரஸ் இல்லாவிட்டால் காணிகள் என்றோ பறிபோய் இருக்கும். எனவே, மலையக மக்களின் இருப்புக்காக, பாதுகாப்புக்காக காங்கிரஸ் வேட்பாளர்களை நிச்சயம் வெற்றிபெறவைக்க வேண்டும் என்று இதொகாவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

மஸ்கெலியா பகுதியில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் ரமேஷ் மேலும் கூறியவை வருமாறு ,

‘‘நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்தவேளை, வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டு வழிநடத்தியவர்தான் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதனால்தான் ஜனாதிபதி தேர்தலின்போது அவரை ஆதரிக்குமாறு அறிவித்திருந்தோம்.

அதுமட்டுமல்ல அவர் தலைமையிலான ஆட்சியில் குறுகிய காலப்பகுதிக்குள் மலையகத்துக்கு பல சேவைகளை பெற்றுக்கொடுக்க முடிந்தது. காணி உரிமையை வழங்குவதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டது. சம்பள பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நாட்டையும் பாதுகாத்து, மலையகத்துக்குரிய அபிவிருத்திகளுக்கான உதவிகளையும் ரணில் விக்கிரமசிங்க வழங்கினார். எமது மக்கள் அவருக்கு வாக்களித்தனர். ஏனையோர் வாக்களிக்க வில்லை. அதனால் பெரும்பான்மையை பெறமுடியாமல்போனது.

தற்போது பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் எமது மக்கள் ஏன் இதொகா வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும்? இதொகாதான் மக்களுக்காக குரல் கொடுக்கும், மக்களுக்காக சேவைகளை செய்துள்ளது. உரிமையுடன் வாக்கு கேட்பதற்குரிய தகுதி எமக்குதான் உள்ளது. காங்கிரஸ் இல்லாவிட்டால் மலையகத்தில் காணிகளெல்லாம் பறிபோய் இருக்கும்.

நாம் தேர்தல் காலத்தில் மட்டும் மக்கள் மத்திக்கு வரவில்லை. என்றும் மக்களுடன்தான் இருக்கின்றோம். ஆனால் தேர்தல் காலத்தில் மட்டும் தோட்டங்களுக்கு வருபவர்கள்தான் காங்கிரஸ் எதையும் செய்யவில்லை என விமர்சித்துக்கொண்டுள்ளனர்.

தபால்மூல வாக்களிப்பில் எமது அரச ஊழியர்களில் 75 வீதமானோர் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கே வாக்களித்துள்ளனர். ஏனெனில் எமது மக்களுக்கு அரச சேவையில் வேலைகளை பெற்றுக்கொடுத்ததும் காங்கிரஸ்தான். எனவே, உதிரிகளுக்கு வாக்களித்து, வாக்குகளை சிதறடிக்காமல், சிந்தித்து வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.’’ - என்றார் ரமேஷ்.

# கிழக்கில் நான்கு வருடங்களுக்கான வாழ்நாள் சாதனையாளர்களாக 8 கலைஞர்கள் தேரிவு

**( வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கில் நான்கு வருடங்களுக்கான வாழ்நாள் சாதனையாளர்களாக விருது பெறும் எட்டு பெருங் கலைஞர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது .

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் இன்று காலை புதன்கிழமை இதனை வெளியிட்டு வைத்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2024 ம்ஆண்டில் நடத்தப்படவுள்ள இலக்கிய விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது பின்வரும் கலையிலக்கிய



ஆளுமைகளுக்கு வழங்கப்படுகின்றது.

**2021ம் ஆண்டு**

மேனாள் மேராசிரியர். சி.மௌனகுரு - மட்டக்களப்பு .

**2022ம் ஆண்டு**

மேனாள் பேராசிரியர். எம் ஏ. நுஹ்மான் - அம்பாறை.

கேணிப்பித்தன் ச.அருளானந்தம் - திருகோணமலை.

**2023ம் ஆண்டு**

டிடபிள்யூ.. உபநந்த வெலிக்கல - திருகோணமலை.

தாமரைத்தீவான் . சோ. இராசேந்திரம் - திருகோணமலை

மக்கத்தார் ஏ.மஜீத் - அம்பாறை

**2024ம் ஆண்டு**

எஸ்எல்எம். ஹனிபா - மட்டக்களப்பு.

வெல்லவூர்காபோல் சீ. கோபாலசிங்கம் - மட்டக்களப்பு.

# துயிலுமில்லத்தில் சிரமதானப்பணி



**(அ . அச்சுதன்)**

திருகோணமலை மாவட்டம் , மூதூர் கிழக்கு சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்தில் சிரமதானப்பணிகள் இடம் பெற்றது.

நிகழ்வில் உயிர்நீர்த்த மாவீரர்களை நினைவேந்தி சிரமதானபணிகள் முன்னெடுக்கப்பட்டது .

பொதுமக்கள் பலர் சிரமதானப்பணியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.




சுபீட்சம்
மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


நாடாளுமன்றத்
தேர்தல்
2024
ஆயிரக்கணக்கில் வாக்குகளை
பெற்று நாடாளுமன்ற செல்ல
மில்லியன் கணக்கில்
வாக்காளர், பார்வையாளர்களைக்
கொண்ட சுபீட்சம் ஊடகத்தில்
குறைந்த விலையில்
விளம்பரங்களை வெளியிடுங்கள்
077 664 5232 / 077 311 2601


யாழ்ப்பாணம் ஆரியகுளத்திற்கு அருகாமையில்
3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
(தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்)
தொடர்புகளிற்கு-0775209915
LAND FOR SALE